RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# சிலப்பதிகாரத்தில் சூழலியல் உணவுகள்

செ. சுகுணா [அ, *]

[அ] தமிழ்த்துறை, ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் வித்யாலய கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்- 641020, தமிழ்நாடு, இந்தியா.

# Ecological Foods in Silappathikaram

S. Suguna [a, *]

[a] Department of Tamil, Sri Ramakrishna Mission Vidyalaya College of Arts and Science, Coimbatore-641020, Tamil Nadu, India

* Corresponding Author: suguna@gmail.com

Received: 05-04-2024
Revised: 30-06-2024
Accepted: 11-07-2024
Published: 01-08-2024

Check for updates

## ABSTRACT

Silappathikaram has a special place among the literature that recorded the cultural movements of the people. Ilangovadigal records the religious and customs of the four varnas and other tribes including the hunters who were not there. Food news features prominently in them. This essay looks at the commentator's detailed view of Kulam and the food of the people of the tribe available in the forest, hills and plains, the way they were cooked, and the offerings of the gods.

**Keywords:** Silambam, ecological foods, intermediate kula food, maruvurpakkattu koolam, daivapadayal food, vettuvar food

## முன்னுரை

தமிழக சேர, சோழ, பாண்டிய நாடுகளில் கதைக்களமாக கொண்டு விளங்கும் சிலப்பதிகாரக் காப்பியத்தில் பல்வேறுபட்ட மக்களில் உணவு குறித்த சிந்தனைகள் காணப்படுகின்றன. புகார், மதுரை, வஞ்சி முதலான நகர மக்களின் வாழ்வியல் சூழல் உணவுக் குறிப்புகள் கிடைக்கின்றன. சோழநாட்டு கடைத்தெருக்களில் விழாப்பொழுது குவிக்கப்பட்ட கூலம் (தானியம்) முதலிய உணவுகள், கண்ணகி கோவலன் மதுரை நெடும்பயணத்திலும், வேட்டுவர் கொற்றவைக்கு விழா எடுத்துக்கொண்டாடும் படையல் உணவுகளும், சேரநாட்டுக் குன்றக் குறவர்களின் மலைநாட்டு பரிசு மற்றும் உணவுகள், காப்பியத்தில் காணலாகும் தெய்வப்படையல் உணவுகள் முதலானவை இங்கு குறிப்பிடத்தகுந்த உணவியலுக்குரிய இடங்களாகும். இத்தகைய உணவு சார்ந்த இடங்களே ஆய்விற்குரிய களனாகிறது.

## சோழநாட்டு மருவூர்ப்பாக்கத்தில் கூலம்

சோழ நாடு சோறுடைத்து எனும் சொல்லடைவுக்கிற்கேற்ப புகார்நாட்டு மருவூர்ப்பாக்கம் இருந்ததை இங்கு பார்க்க முடிகிறது. இந்திரவிழவூரெடுத்த காதை ஏராளமான பல்வகைப் பொருட்கள் இந்திவிழாவிற்காக வந்து குவிந்திருந்த பகுதியினைக் கறுகிறது. மேலும் அங்கு இரவு, பகல் அங்காடிகள் இருந்து பொருட்களை விற்றுள்ள செய்தியினையும் எடுத்துரைக்கிறது. மருவூர்ப் பாக்கத்தில் இறங்கிய விலை உயர்ந்த பொருட்களில் உணவு பண்டங்களிருந்ததைக் காதைக் குறிப்பிடுகிறது. அதில்,

"வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகும்

பால்வகை தெரிந்த பகுதிப் பண்டமொடு

கூலங் குவித்த கூல வீதியும்

காழியர் கூவியல் கண்ணொடை யாட்டியர்.." (சிலப். 5. 21-24)

அழகுப்பொருட்கள், அதன் கலைஞர்கள், விட்டுப்பொருள்கள், உடை முதலானப் பொருட்கள், இவற்றுடன் வெற்றிலை விற்பவர், வாசனைப்பொருட்கள் என விரிவானப் பட்டியலைக் காதை கூறுகின்றது. அதில் உணவாக உண்ணும் கூலம் என்ற தானியப் பொருட்களும் உண்டு. அடியார்க்குநல்லார் உரையால் மிகுதியான உணவுகள் கடைத்தெருவில் விற்பதற்கு இருந்ததைக் குறிப்பிடுகிறார். "பகுதி வேறுபடத் தெரிந்த முதிரை முலிய பண்டத்தொடு எண்வகைக்கூலமும் குவித்து விற்கும கூலக்கடைத் தெருவும் உண்டு. எண்வகைக்கூலமாவன, நெல்லுப் புல்லு வரகுதினை சாமை, இறுங்கு தோரையொடு கழைவினை நெல்லே எனவிவை" (சிலப். பக்.154) பதினெட்டு வகை கூலம் உண்டென்பதை மதிவாணவர் நாடகத்தமிழ்நூல் ஈண்டு செய்தி தரும் என அடியார்க்கு நல்லார் எடுத்துரைக்கிறார். இவற்றால் உணவு உண்ணும் தானியங்களுக்கு மிகுந்த முக்கியத்துவம் சிலப்பதிகாரக் காலத்திலிருந்தென்பது புலனாகும்.

## இடைக் குல உணவுகள்

முல்லை நில மக்கள் இடைக்குல ஆநிரை வளர்க்கும் மாதிரி தன் மகள் ஐயையுடன் இடைக்குல மகளிரை அழைத்து கோவலன் கண்ணிக்கு உணவு சமைக்கத் தேவையான பாத்திரப் பண்டங்கள் காய்கள் முதலானவற்றை முறையாக கொடுத்தனர் என இளங்கோவடிகள் குறிப்புரைக்கிறார். மாதரி கூறியவாறு,

"மடைக்கலம் தன்னொடு மாண்பு உடை மரபின்

கோளிப் பாகல் கொழுங் கனித்திரள் காய்,

வாள் வரிக் கொடுங் காய், மாதுளம் பசுங் காய்,

மாவின் கனியொடு வாழைத் தீம் கனி, தீம் கனி,

சாலி அரிசி, தம் பால் பயனொடு,

'கோல் வளை மாதே! கொள்க' எனக் கொடுப்ப..," (சிலப்.16:20-27)

அவ்விடைக்குல மகளிர் உணவு பாத்திரங்களோடு, மாட்சிமை மிக்க பெரியோர் கொடுத்தல் போலப் பூக்காமலேயே காய்க்கும் கொழுவிலாக்காய், வளைந்த கோடுகளையுடைய வெள்ளரிக்காய் மாதுளையின் இளங்காய், மாங்கனி, இனிய வாழைக்கனி, செந்நெல் அரிசி ஆகியவற்றைக்கொடுத்தனர். இவற்றோடு தமது (இடைக்) குலத்திற்குரிய பால், தயிர், நெய் அகியவற்றையும் கொண்டு மாதே இவற்றைக் கொள்வீராக எனக் கண்ணகியிடம் கொடுத்தனர் எனும் காதையின் செய்தி பார்க்கின்ற போது முல்லைநில சூழலியல் உணவுகளே இங்கு பேசப்படும் உணவுகளாகும். சாகவ நோன்பிகள் தாவர உணவுகளை மட்டும் உண்பர் என்பதை சிலம்பு கூறுகிறது. கோவலன் 'சாகநோன்பி' என்பதனால் பகல்பொழுது உண்ணா நேன்புத் தன்மையுடையவர் என இளங்கோவடிகள் குறிக்கிறார். உணவு சமைத்தற்குரிய இடத்தினை மடைக்கலம் என்ற சொல்லினைக் குறிப்பிடுகிறது.

## வேட்டுவர் உணவுகள்

வேட்டுவர்கள் கள்ளுண்ணும் பழக்கத்தினை உடையவர்கள் என்பதை வேட்டுவவரி குறிப்பிடுகிறது. மட்டுண் வாழ்க்கை (கள் உண்டு வாழும் வாழ்க்கையினைக் கொண்டவர்கள்), கட்டுண் வாழ்க்கை (களவேகட்டு உணவாக உண்ணும் மாக்கள்) என்ற சொற்றொடரால் இளங்கோவடிகள் வேடுவர் உணவுப் பழக்கங்களை எடுத்துக்கூறுகிறார். இதனை,

"மட்டுண் வாழ்க்கை வேண்டுதி ராயிற்

கட்டுண் மாக்கள் கடந்தரு மெனவாங்..,( சிலப்.12:18-9)

கொற்றவைக்குப் படையல் உணவாக அவிப்பலியாக (குருதிக் கொடை) இரத்த உணவுகள் படையல் உணவாகக் கொடுத்துள்ளனர். தெய்வமேறி ஆடிய சாலினியை கொற்றவையாக வேடம் புனைந்து அங்கு சில வேட்டுவ உணவுகள் பரிமாறப்பட்டதை காப்பிய வரிகள் எடுத்துரைக்கிறது. தெய்வப்படையல் உணவாக,

"பழுக்கலும், நோலையும் விழுக்கு உடை மடையும்

பூவும் புகையும் மேவிய விரையும்..," (சிலப்.16:37-38)

பசிய நிறமுடைய தானியங்கள், அவரை, துவரை, சாமை (அவியல்) முதலான தானியங்களைப் புழுக்கல் என்ற பெயரால் அழைத்துள்ளனர். எள்ளினால் சமைத்த பண்டத்திற்கு 'நோலை' என்று பெயர். வழுக்குடை மடை - இறைச்சியோடு கூடிய சோறு இவையேயன்றி தங்களையேப் பலியாகக் கொல்லுமளவிற்குக் குருதிப்படையல் உணவாக வழங்கப்பட்டிருப்பதையும் காணமுடிகிறது. காடுகளில் எள் முதலான புழுக்கைகள் எளிதில் கிடைக்கும் உணவுப்பொருட்கள் என்பதால் கொற்றவை வழிவாட்டிற்குரிய படையல் உணவாக இவை அமைந்துள்ளன. கொற்றவைக்குப் பலி உணவாக 'அவிப்பலி உணவு' வழங்கியதை வேட்டுவரி,

"நிணனுகு குருதிகொ ணிகரடு விலையே...,

அடுபலி யனையவர் முகரிநி னடிதொடு

படுகட னிதுவுசு பலிமுக மடையே.., (சிலப்.16:20-27)

குறிப்பிடும். அவிப்பலி என்பது தமது குருதியினைத் தாமே கொடுத்தலாகும். இப்பலியிட்டு முறைகள் தற்காலத்தும் நடைபெற்றுவருபவை. உயிர் பலி மற்றும் குருதிப் பலியீடுகள் இறைவனை மகிழ்விக்கும் என்ற நம்பிக்கையே இதற்குக் காரணமாகும்.

## வஞ்சியும் குறவர் உணவும்

சிலப்பதிகாரத்தின் வஞ்சிக்காண்டம் மலை நாடான சேரநாட்டின் வளம், வீரம் அகியவற்றைப் பேசுகிறது. செங்குட்டுவனின் மூதாதையர் பாரதப்போரில் பெருஞ்சோற்றினை வீரர்களுக்கு அளித்து பசியாற்றி தானும் உண்ட உதயஞ்பெருஞ்சேரலாதன் பெருங்குணத்தைப் காப்பியம் விதந்துரைக்கிறது. அதே போன்று சேரன் செங்குட்டுவன் விளங்குகிறான் என்ற புகழும் வஞ்சியின் சிறப்பில் இடம்பெறுகின்றது. குன்றக் குறவர் கண்ணகி தெய்வமானதை எடுத்துரைக்கின்ற போது மலைபடு பொருள்களுடன் வந்து செங்குட்டுவனை வணங்கி நிற்மிடம் கவனித்தற்குரியது. அதில் வஞ்சியின் மலைநாட்டு உணவுகள் அதிகம் காணப்படுகின்றன.

"ஏல வல்லியும், இருங் கறி வல்லியும்,

கூவை நூறும், கொழுங் கொடிக் கவலையும்,

தெங்கின் பழனும், தேமாங் கனியும்,

பைங் கொடிப் படலையும், பலவின் பழங்களும்,

காயமும், கரும்பும், பூ மலி கொடியும்,

கொழுந் தாள் கமுகின் செழுங் குலைத் தாறும்,

பெரும் குலை வாழையின் இருங்

கனித் தாறும்;....."(சிலப்.25:36-55)

ஏலக்கொடி, கருமிளகுக்கொடி, கூவைக்கிழங்கு மாவு, கொழுத்த கலைக்கொடியில் கிழங்குகள், தென்னை நெற்றுகள், தேன் போன்ற சுவையுடைய மாங்கனிகள், பச்சிள மாலை, பலாப்பழம், வெள்ளைப்பூண்டு, கரும்பு, பூங்கொடிகள், கொழுமையான அடிமரத்தை ஈனும் பாக்கு மரத்தின் செழுமையான குலைத்தாறுகள், பெரிய தாற்றிணை ஈனும் வாழையின் பழக்குலைகள், பிற விலங்குக் குட்டிகள், பறவைகளெனப் பட்டியல் மிகப்பெரிதாக நீள்கிறது.

மலைநாட்டில் விளைந்த மாசற்ற நன்கு விளைந்த சுவைத்தற்குரியனவற்றை குறவர் ஆராய்ந்து தெரிவு முறையை உணரமுடிகிறது. மன்னனுக்குப் பரிசாகக் கொடுக்க வேண்டும் என்ற வேட்கையால் உணவுப்பொருட்கள் தரமானதாக இருந்துள்ளதை அரிய முடிகிறது. கனிகள், சுவையுடைய தேன், கரும்பு உள்ளிட்ட இயற்கைசார் சூழல் உணவுகள் நிரைய இடம்பெற்றுள்ளன.

இவற்றினுக்கு ஏராளமான மருத்துவக் குணங்கள் உண்டு. சளிநீக்கி உடற் குளிர்ச்சி தரும் குருமிளகு, வாசனைதரும் ஏலம், உடல் பலம் தரும் கள், பலாப்பழம், கிழங்குகள் என அனைத்துமே உடல் வலிமைக்கும் நீண்ட ஆயுள் பெறுவதற்கும் கொண்டு சொல்லப்பட்ட பொருட்களாகும்.

## முடிவுரை

சிலப்பதிகாரகாலத்தில் காணப்படும் மேற்சுட்டிய உணவு குறித்த சிந்தனைகளைக் காணுறும் போது மக்கள் வாழ்வில் உணவு மேலாண்மை மேலோங்கியிருந்ததைக்கட்டுரை தெளிவுபடுத்தியுள்ளது. கூலம் (தானியம்) 18 வகையான சிறுதானியங்கள் இருந்ததை அடியார்க்குநல்லார் உரை குறிப்பிடுவதன் மூலம் சோழநாட்டு உணவில் தானியங்கள் பற்றிய விரிந்த ஆய்விற்கு இது களமாகிறது. மேலும் வேட்டுவர் உணவுகள் குறித்த பார்வையும், மதுரை புறஞ்சேரியில் இடைக்குல மக்கள் தரும் உணவுகள், மலைநாடாம் சேர நாட்டு குறவர் உணவுகளென அனைத்தும் சிலம்பில் நிரல் பட சொல்லியிருப்பது எதிர்கால நிலையில் ஆராய்வதற்கு வகை செய்கிறது.

## References

சிலப்பதிகாரம் மூலமும் உரையும் அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லாருரையும், டாக்டர் உ.வே. நாமிநாமையர் நூல் நிலையம், 2008 சென்னை.

சிலப்பதிகாரம் மூலம், ப.சரவணன் செவ்வுரை, சந்தியா பதிப்பகம், 2008, சென்னை.

சூழலியல் ஒரு அறிமுகம், க.வி.இலக்கியா, சா.சு. நந்தினி., விடியல் பதிப்பகம்2022, சென்னை.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2024. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License